2022 மே 4] [திரு. எ.வ. வேலு]

நவீன உத்திகளைப் பயன்படுத்தி, laser light*-களைப் பொருத்தி, திருவள்ளுவர் முகம் தெளிவாகத் தெரிகின்ற அளவில் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறேன். அவர், தனியார் நிறுவனங்களையெல்லாம் அழைத்து,* quotation*-களையெல்லாம் வாங்கி கொண்டிருக்கிறார். திருவள்ளுவரை பொறுத்தளவில், கழக நண்பர்கள் மற்றும் இந்த ஆட்சியில் இருப்பவர்களைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. எனவே, இன்னும் சிறப்பாக, அதற்கு முக்கியத்துவம் தருவோம். ஏற்கெனவே நீங்கள் கொடுத்த கடிதத்திற்குக் கட்டாயம் தீர்வு காணப்படும்.*

4. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021-2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 20 முதல் 22 வரையிலான மூன்று அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் அவர்கள், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஓர் ஆண்டிற்குள் நான்காவது அறிக்கையினைத் தாக்கல் செய்வதற்கு எங்களை ஊக்கப்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021-2022 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.